# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.138/2023 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சண்முகநாதன் | த–பெ | பாலாஜி |
| ஊர்: | : | குன்றக்குடி | | |
| வயது: | : | 22/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் நிறுவனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026**

**எதிரி ஆஜர் இல்லை.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் குன்றக்குடியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். சூர்யாவும் நானும் நண்பர்கள். நான் கல்லூரி முடித்துவிட்டு திருவண்ணாமலையில் உள்ள கோச்சிங் சென்டரில் காவல் அலுவலர் வேலைக்காக பயிற்சி பெற்று வந்தேன். விடுமுறை காலங்களில் திருப்பூர் சென்று எலக்ட்ரிக்கல் வேலை செய்து வழக்கம். வழக்கின் எதிரி சூர்யா என்பவர் விசேஷ காலங்களில் மதுரை, தேனி ஆகிய இடங்களில் செருப்பு கடை நடத்தி வந்தார். அதில் நான் வேலை செய்து வந்தேன். மேற்படி சூர்யா நபர் ஒருவரை வேலைக்கு வைத்திருந்தார். அந்த நபர் வேலை பார்க்காமல் இருந்த வந்தார். ஏன் வேலை பார்க்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது. இது தொடர்பாக சூர்யா என்பவர் நான் அழைத்து வந்த நபரிடம் நீ எப்படி தகராறு செய்யலாம் என்று சொன்னார். அதனால் அவர் என்மீது கோவமாக இருந்து வந்தார். நான் வீட்டில் இல்லாத சமயத்தில் எனது வீட்டிற்கு வந்து என் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களை எதிரியானவர் மிரட்டி பிரச்சனை செய்து வந்தார்.

குறிப்பாக 28.08.2022 அன்று இரவு 8.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது சூர்யா மற்றும் பின்னர் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட சுதன் என்ற அவருடைய நண்பர் இருவரும் வந்து முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு என்னிடம் தகராறு செய்தார்கள். மேலும் சூர்யா கையில் வைத்திருந்த அரிவாளை கொண்டு எனது இடது ஓர தலையிலும் இடது தொடையிலும் தாக்கினார்கள். மேலும் எதிரியானவர் தேவுடியா மகனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டார். அத்துடன் காயம் பட்ட நான் சூரக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்ந்தேன். அப்போது போலீசார் அங்கு வந்து என்னிடம் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்களை நான் சொல்லி எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். **புகார் அசாஆ1.** போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி விபரங்களை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 10:41:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.138/2023 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லதா | க–பெ | பாலாஜி |
| ஊர்: | : | குன்றக்குடி | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சமையல் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026**

**எதிரி ஆஜர் இல்லை.**

----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் குன்றக்குடியில் வசித்து சமையல் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மகனின் நண்பர் ஆவார். அசா1 எனது மகன். சூர்யாவும் எனது மகனும் நண்பர்கள். எனது மகன் கல்லூரி முடித்துவிட்டு திருவண்ணாமலையில் உள்ள கோச்சிங் சென்டரில் காவல் அலுவலர் வேலைக்காக பயிற்சி பெற்று வந்தார். விடுமுறை காலங்களில் திருப்பூர் சென்று எலக்ட்ரிக்கல் வேலை செய்து வழக்கம். வழக்கின் எதிரி சூர்யா என்பவர் விசேஷ காலங்களில் மதுரை, தேனி ஆகிய இடங்களில் செருப்பு கடை நடத்தி வந்தார். அதில் அசா1 வேலை செய்து வந்தார். மேற்படி சூர்யா நபர் ஒருவரை வேலைக்கு வைத்திருந்தார். அந்த நபர் வேலை பார்க்காமல் இருந்த வந்தார். ஏன் வேலை பார்க்காமல் இருக்கிறீர்கள் என்று அசா1 கேட்டதற்கு எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது. இது தொடர்பாக சூர்யா என்பவர் நான் அழைத்து வந்த நபரிடம் நீ எப்படி தகராறு செய்யலாம் என்று சொன்னார். அதனால் அவர் அசா1 மீது கோவமாக இருந்து வந்தார். அசா1 வீட்டில் இல்லாத சமயத்தில் எங்களது வீட்டிற்கு வந்து என்னையும் எனது கணவரையும் மற்றும் உறவினர்களையும் எதிரியானவர் மிரட்டி பிரச்சனை செய்து வந்தார்.

குறிப்பாக 28.08.2022 அன்று இரவு 8.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது சூர்யா மற்றும் பின்னர் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட சுதன் என்ற அவருடைய நண்பர் இருவரும் வந்து முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு அசா1 இடம் தகராறு செய்தார்கள். மேலும் சூர்யா கையில் வைத்திருந்த அரிவாளை கொண்டு அசா1ன் இடது ஓர தலையிலும் இடது தொடையிலும் தாக்கினார்கள். மேலும் எதிரியானவர் தேவுடியா மகனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டார். அத்துடன் காயம் பட்ட அசா1 சூரக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். அப்போது போலீசார் அங்கு வந்து எங்களிடம் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்களை அசா1 சொல்லி எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தார். அப்போது நான் உடன்

இருந்தேன். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி விபரங்களை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 10:41:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.